# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.356/பேரூ/2023
நாள். 27.12.2023

| | | |
|---|---|---|
| திரு.M.பாலசுப்ரமணியன்,<br>அண்ணாமலை நகர்,<br>சிதம்பரம், கடலூர் மாவட்டம் | – | முறையீட்டு மனுதாரர் |
| செயல் அலுவலர்,<br>அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சி,<br>சிதம்பரம், கடலூர் மாவட்டம் | – | எதிர்மனுதாரர் |

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், அண்ணாமலைநகர், K.R.M. நகர், 8th.cross street என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.பாலசுப்ரமணியன் என்பவரின்08.11.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.11.2023 அன்று பெறப்பட்டு, 356/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுக்கா, அண்ணாமலைநகர், K.R.M. நகர், 8th.cross street என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.பாலசுப்ரமணியன் என்பவர் தனது 08.11.2023 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

" நான் மேற்கண்ட முகவரியில் பல ஆண்டுகளாக வசித்து வருகிறேன். நான் MA படித்து எனது தந்தை, அக்கா, அண்ணன்களோடு கூட்டு குடும்பமாக வாழ்ந்து வருகிறேன். எனது தந்தைக்கு 90வயது ஆகிறது. இவர் இருதய நோயால் பாதிக்கப்பட்டு தற்பொழுது சிகிச்சை

அளித்து வருகிறேன்.மேலும் எனது அன்றாட தொழிலாக 20க்கும் மேற்பட்ட ஆடுகளை எனது குடும்ப செலவுகளுக்காக வளர்த்து வருகிறேன். என்னை போன்று மற்றவர்களும் இப்பகுதியில் ஆடுகளை வளர்த்து வருகின்றனர்.நான் வளர்க்கும் ஆடுகளுக்கு அண்ணாமலை நகர் பேரூராட்சிக்கு ஆண்டுதோறும் தொழில்வரி செலுத்தி வருகிறேன். இந்நிலையில் அண்ணாமலைநகர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆடுகளை தெற்கிருப்பு, மண்ரோடு, K.R. M. நகர், ஆமைப்பள்ளம், திடல்வெளி ஆகிய பகுதிகளில் உள்ள வெறிக்கொண்ட தெருநாய்கள் தினமும் கடித்து கொன்று தின்னுகிறது. இதனால் நாங்கள் எங்களது உயிரைவிட பெரியதாக கருதும் ஆடுகளை இழந்து வருமானத்துக்கு அல்லல்பட்டு வருகிறோம். இக்கடிதத்தோடு எனது ஆட்டை நாய் கடித்து கொன்றதற்கான புகைப்படம் இணைப்பப்பட்டுள்ளது.

பார்வை 2ல் கூறியுள்ள கடிதத்தின் கீழ் மேலே குறிப்பிட்டுள்ள பகுதிகளில் உள்ள நாய்களை பிடிக்க கோரி மனு அளித்தும் என் மீது தற்போதைய E.O. திரு. G.பாலமுருகன் இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவர் நடவடிக்கை எடுக்க தவறும் காரணத்தால் தெருக்களில் சுற்றித்திரியும் நாய்கள் ஆடுகளையும், சாலையில் செல்லும் பள்ளிக்குழந்தைகள், முதியோர்கள், பெண்கள், வாகனவோட்டிகள், வியாபாரிகளையும் கடித்து உயிர்களுக்கு சேதத்தையும், இழப்பையும் ஏற்படுத்துகிறது. மேலும், தெருவில் யாரும் நடமாடமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. 21.01.2022ல் நான் EOவை பேரூராட்சி அலுவலகத்தில் நேரில் சந்தித்து புகார் மனு கொடுக்கும் போது EO ஒரு அரசாங்க அதிகாரி என்பதை மறந்து தனது கடமைகளிலிருந்து தவறி என்னை தெருவில் உள்ள வெறிக்கொண்ட நாய்களை கல்லை எடுத்து அடித்துக் கொல்லுமாறும் ஒருநாய்க்கு ரூபாய் 75.00 வீதம் தருகிறேன் என்றும் நான் நான்கு நாய்களை கொன்றால் ரூ.300.00 ரூபாய் முன்னூறு பணம் தருகிறேன் என்றும் பொறுப்பற்ற முறையில் பேசுகிறார். எனவே மன ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள எனக்கு இம்மனு குறித்து கூராய்வு செய்து உரிய நடவடிக்கையை EO மீது எடுக்குமாறு வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 20.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் அண்ணாமலை நகர் செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 04.12.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு பின்னர் 20.12.2023 நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் 20.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி வாக்குமூலம் சமர்ப்பிக்கவில்லை.

5) அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சி செயல்அலுவலர் 20.12.2023 அன்றைய விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளனர்:-

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பேரூராட்சிப்பணியாளர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்த எனது 19.12.2023 நாளிட்ட வாதுரையை இம்முறைமன்றத்தில் முன்

சமர்ப்பித்து அதில் உள்ள விவரங்களையே எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள அண்ணாமலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட மண்ரோடு, கே.ஆர்.எம். நகர், ஆமைப்பள்ளம், திடல்வெளி ஆகிய பகுதிகளில் நாய்கள் நடமாட்டம் கண்காணிக்கப்பட்டு அவற்றை பிடித்து அவற்றிற்கு ABC இனப்பெருக்கக் கட்டுப்பாடு செய்தும், மேலும் Anti rabies தடுப்பூசிகளை செலுத்தியும், அவற்றை பிடித்த இடத்திலேயே விடுவிக்கப்படுகின்றன என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட பகுதியில் வெறி நாய் கடியால் யாரும் பாதிக்கப்படவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 19.12.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவானது உண்மைக்கு புறம்பான அம்சங்களுடன், சட்டத்திற்கு அப்பாற்பட்டும் அமைந்து காணப்படுகிறது. மனு தள்ளுபடிக்கு உகந்தது ஆகும். கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம் அண்ணாமலை நகர் பேரூராட்சியானது கடந்த 04.04.1963ம் ஆண்டு முதல் முதல்நிலை பேரூராட்சியாக துவங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு 31.05.1994ம் வருடம் முதல் சிறப்புநிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றுத. புகழ்மிக்க சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம் இப்பேரூராட்சியின் எல்லைக்குட்பட்டு அமைந்து பல மாணவி மாணாக்கர்களின் கல்வி திறன் மேம்பாடு அடைய பயன்பட்டு வருகிறது. பல சிறப்பு மிக்க பேரூராட்சி மன்ற தலைவர்கள், செயல்திறன் மிக்க செயல் அலவலர்கள் இப்பேரூராட்சியில் நன் முறையில் பணிபுரிந்து வந்துள்ளனர். இப்பேரூராட்சியின் மொத்த ஜனத்தொகை 16500ம் 15 வார்டுகளை உள்ளடக்கி அமைந்துள்ளது. இப்பேரூராட்சியில் திறன்மிக்க செயல் அலவலர், சுமார் 8 அலுவலக பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள் 15 நபர்கள், திடக்கழிவு பணியாளர்கள், டெங்கு களப்பணியாளர்கள் மற்றும் குடிநீர், தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர்கள் மொத்தமாக 47 நபர்கள் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றனர்.மனுதாரர் தனது மனுவில் சொல்லியுள்ளது போல் அவர் எவ்வித சமூகப்பணியும் பொதுமக்களுக்கு செய்வதில்லை. மற்றும் எவ்வித பொதுநலன் சார்ந்த செயற்பாட்டாளர் இல்லை. மாறாக மனுதாரர் அண்ணாமலைநகர் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூராட்சி மன்ற தலைவர், செயல் அலவலர் மற்றும் பணியாளர்கள் மீது தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக உண்மைக்கு மாறாகவும், சட்டத்திற்கு புறம்பாகவும் புகார் மனுக்களை அனுப்பி உள்ளார். மேலும்,இதன் அடிப்படையில் பேரூராட்சி மன்ற தலைவர், செயல் அலுவலர் மற்றும் பணியாளர்களை பொய்யான புகார்களை கூறி தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள நினைக்கிறார். மேலும், மனுதாரரின் அடிப்படை உரிமை நிலையை மீற செயல்படும் வண்ணம் (Beyond the limit) எல்லாவிதமான பேரூராட்சியின் பணிகளில் தலையிட்டு மனுதாரரை கண்டு எல்லோரும் பயப்பட வேண்டும் என்ற நோக்கிலும்,

அதிகார தோரணையில் தான் சொல்லும் சட்டத்திற்கு புறம்பான அனைத்து செயற்பாடுகளையும் செய்து தர வேண்டும் என்ற ஆணவ போக்கில் செயல்பட நினைக்கிறார்.

மனுதாரர் மனுவில் தான் வளர்த்து வரும் ஆடுகளுக்கு எதிர்மனுதாரர் பேரூராட்சிக்கு ஆண்டுதோறும் தொழில் வரி செலுத்தி வருகிறார் என்ற உண்மைக்கு மாறான அம்சத்தை சொல்லியுள்ளார்.

<u>Professional Tax means</u>

"Professional tax is a direct tax that is deduction from concerned person's gross salary by the employer". This tax is levied by the State Government and thus can vary depending on the state you live in.

Professional tax is a tax on all kinds of profession, trades and employment and is levied based on the income of such profession, trade

மேற்கண்ட அம்சத்தின் அடிப்படையில் மனுதாரர் தான் வளர்க்கும் ஆடுகள் மூலம் ஆண்டிற்கோ (அ) மாதத்திற்கோ எவ்வளவு வருமானம் ஈட்டி வருகின்றார் என்ற விபரம் தெரிவிக்கப்படவில்லை.தொழில்வரி செலுத்துவோர் ஆறு மாத காலத்திற்கு ஒரு முறை செலுத்தும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு அதன்படி வரி செலுத்துவோர் பேரூராட்சிக்கு வரி செலுத்தி வருகின்றனர். அதன்படி தற்போதைய கேட்பு பட்டியல் (Demand Schedule) படி அண்ணாமலை நகர் பேரூராட்சியில் 3748 எண்ணிக்கை நபர்கள் தொழில் வரி (Professional Tax) செலுத்தி வருகின்றனர். மேற்கண்ட கேட்பு பட்டியலில் தற்காலம் வரை மனுதாரர் பெயர் இடம் பெறவில்லை. இதிலிருந்தே மனுதாரர் மேண்மைமிகு முறையிட்டு மன்றத்தில் தவறான தகவல்களை பதிந்து தனக்கு சாதகமாக பரிகாரம் தேட முற்படுகிறார். மனுதாரர் தன் ஆடு வளர்ப்பு மூலம் ஆண்டு வருமானத்தை எழுத்து மூலமாக பேரூராட்சிக்கு தெரியப்படுத்தும் பட்சத்தில் தொழில்வரி நிர்ணயம் செய்து அவரது ஆசையை நிறைவேற்றப்படும் என்பதை எதிர்மனுதாரர் தெரிவித்துக் கொள்கிறார். Ministry of Fisheries, Animal Husbandary and Dairying Notification ( 10/03/2023) படி G.S.R. 193 (E) draft of the Animal Birth Control Rules -2022 – see 7 குறிப்பிட்டவாறு (1) Pet animals – pet animal owned and kept indoor by individuals அதன்படி மனுதாரர் தான் வளர்க்கும் ஆடுகளை தமக்கு பாத்தியமான இடத்தில் பாதுகாப்புஅரண் அமைத்து வளர்க்கப்பட வேண்டும் என்பது விதி.

மனுதாரர் தான் வளர்க்கும் ஆட்டின் சாணத்தை தனக்கு பாத்தியமான இடத்திலே கொட்டி அவ்வப்போது சுத்தம் செய்யப்படவேண்டும். ஆனால் மனுதாரர் வளர்க்கும் ஆடுகளின் சாணத்தை தனக்கு பாத்தியமான இடத்தில் கொட்டாமல் வேண்டுமென்றே ஆணவ போக்குடன் பொதுமக்கள் பயன்படுத்தும் பேரூராட்சி எட்டவாது குறுக்குச்சாலையின் ஓரங்களில் ஆடுகளின் சாணம் மற்றும் கழிவுகளை கொட்டி செல்கிறார். மனுதாரர் செயலை கண்டித்து எட்டாவது குறுக்குச்சாலையில் வசித்து வரும் திருமதி.வெண்ணிலா என்பவர் மாவட்ட ஆட்சியருக்கு மனுதாரர் சுகதார சீர்கேட்டை உருவாக்குகிறார் என புகார் மனு அளித்துள்ளார். மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தல்படி மனுதாரர்

சுகாதார சீர்கேட்டை உருவாக்கும் விதமாக சாலையில் கொட்டப்படும் ஆடுகள் சாணம் கழிவுகளை சுகாதாரப்பணியாளர்கள் மூலம் சுத்தம் செய்யப்பட்டது. இதோடல்லாமல் அண்ணாமலை நகர் பேரூராட்சி பணியாளர்களை வீணாக மிரட்டி அடி பணிய வைத்து தனது ஆடுகள் சாணம் கழிவுகளை சுத்தப்படுத்த வேண்டும் இல்லையென்றால் உங்கள் மீது பொய்ப்புகார் தெரிவித்து வேலையை விட்டு நீக்க ஏற்பாடு செய்து விடுவேன் என மிரட்டி வருகிறார். பேரூராட்சி சுகாதார பணியாளர்கள் பொதுமக்களின் நலன் கருதி அவ்வப்போது மனுதாரர் சாலையில் கொட்டி வரும் ஆடு சாணம் கழிவுகளை சுத்தம் செய்து வருகின்றனர். மனுதாரர் மனுவில் குறிப்பிட்டவாறு பேரூராட்சி எல்லைக்குட்பட்ட தெற்கிருப்பு, மண்ரோடு, K.R.M. நகர், ஆமைப்பள்ளம், திடல்வெளி ஆகிய பகுதிகளில் வெறிநாய்க்கடித்து மனிதர்களுக்கோ அல்லது வளர்ப்பு பிராணிகளோ பாதிக்கப்பட்டது என்று இதுநாள் வரையிலும் எவ்வித புகார் மனுவும் கிடைக்கப்பெறவில்லை. மற்றும் மனுதாரர் குறிப்பிட்டபடி அம்சத்தின்படி அவரது ஆடு வெறி நாய்க்கடித்து இறந்தது என்ற பொய் புகாரை புனைந்துள்ளார்.ஆடு சரியான சுகாதார இன்மையால் நோய் வாய்ப்பட்டு இறந்துள்ளது. மனுதாரர் மனுவில் உயிரைவிட பெரியதாக கருதும் ஆடுகளை இழந்து வருமானத்துக்கு அல்லல் பட்டு வருவதாக சொல்லியுள்ள நிலையில், மனிதனுக்கு உயிர் எவ்வளவு முக்கியம் அதற்காக மனிதர்களை பல Safety Measures பாதுகாப்பு அரண் அமைத்து பாதுகாப்புடன் வாழ்ந்து வருவது போன்று மனுதாரர் உயிரைவிட பெரிதாக கருதும் தான் வளர்க்கும் ஆடுகளுக்கு சரியான பாதுகாப்பு அரண் அமைத்து பாதுகாப்பாக வளர்க்க வேண்டிய கடமை அவரைச்சாரும். ஆனால் மனுதாரர் தான் வளர்க்கும்ஆடுகளை சாலையில் திரிய விடுவதோடல்லாமல் அக்கம் பக்கம் வீட்டாரின் பயிர்களை, செடி கொடிகளை பாழ்படுத்தி வருகின்றது.

அண்ணாமலைநகர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் நன்கு படித்த அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் வேலை பார்க்கும் பேராசிரியர்கள், பணியாளர்கள், மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள் மற்றும் வியாபாரிகள் போன்றோர் குடியிருந்து வருகின்றனர். அவ்வப்போது பேரூராட்சி சுகாதார பணியாளர்கள் சாலை, தெருக்கள் சுகாதார பணி மேற்கொள்ளும் போது சில குடியிருப்பு வாசிகள் வாய்மொழியலாக நாய்கள் தொந்தரவு பற்றி புகார் கூறும்போது எதிர்மனுதாரர் உத்தரவின் பேரில் சுகாதார பணியாளர்கள் தக்க உபகரணங்களோடு தெருவில் சுற்றித்திரியும் அனாமதய தெரு நாய்களை மீன்பிடி Nylon வலை மூலம் பிடித்து TATA ACE வண்டி மூலம் விருத்தாச்சலம் தாலுகா கருவேப்பிலங்குறிச்சி (சுமார் 60 கி.மீ.) காப்பு காட்டு பகுதிகளில் பிடித்த நாய்களை கொண்டு பணியாளர்கள் விட்டு வருகின்றனர். இவ்வாறுள்ள நிலையில் மனுதாரர் மனுவுக்கு வலுசேர்க்கும் விதமாக பொய்யான தகவலை மனுவில் சொல்லியுள்ளது சட்டத்திற்கு புறம்பான செயலாகும்.மனு தள்ளுபடிக்கு உகந்தது ஆகும்.

Ministry of Fishereis, Animal Husbandary and Dairying Notification வழிகாட்டுதலின்படி Sec-3- Project Recognition வழிகாட்டுதலின்படி

"The local authority may conduct the Animal Birth Control program through their own veterinary officers, or if required, local authority may engage the services of an Animal Welfare Organization which is duly recognized by the

Board of Animal Birth Control and which has the requisite training, expertise and human resources, of conducting the Animal Birth Control Program as per the extant policy of the Board"

இதன் காரணமாக புகார் மனுவின் பேரில் தெருநாய்களை பாதுகாப்புடன் பிடித்து எதிர்மனுதாரர் பேரூராட்சி செயல்படுத்தப்பட வேண்டும். இம்முறையில் நிர்வாக நடைமுறை காலதாமதம் ஆகும் நிலையில் தெருநாய்களை பிடித்து எதிர்மனுதாரர் பேரூராட்சி காப்பு காட்டில் கொண்டுபோய் விட்டு வருகின்றது என்பதை எதிர்மனுதாரர் தெரிவித்துக்கொள்கிறார். மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்ட மனுதாரர்புகார் மனு கொடுக்கும்போது EO ஒரு அரசாங்க அதிகாரி என்பதை மறந்து எவ்விதத்திலும் செயல்படவில்லை. எதிர்மனுதாரர் அரசாங்க பணியில் கடந்த 30 வருடங்களாக எவ்வித புகாருக்கும் இடமளிக்காவண்ணம் பொதுமக்கள் நலன் ஒன்றே குறிக்கோளாக எண்ணி சிறப்பாக பணியாற்றி வந்துள்ளார். மனுதாரர் மனுவுக்கு வலு சேர்க்கும் வண்ணமாக புகார் மனுவில் எதிர்மனுதாரர் பொறுப்பற்ற முறையில் பேசினார் என்பது வன்மையாக மறுக்கப்படுகிறது. அவ்வாறு ஒரு நிகழ்வே நடைபெறவில்லை.

மனுதாரர் அடாவடி செயலினால் தான் பேரூராட்சி பணியாளர்கள் மனரீதியாக பாதிப்படைந்துள்ளனர். பின்னிட்டு எதிர்மனுதாரருக்கு புகார் மனு சம்மந்தமாக ஏதும் கூடுதல் ஆவணங்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையும் எதிர்மனுதாரர் நிலை நிறுத்திக்கொள்கிறார் (reserve the rights to be filed the Additional written statement) ஆகவே மேண்மைமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் மனுதாரரின் தவறான புகார் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய இம்எதிர்மனுதாரர் பிரார்த்திக்கிறார்" என தெரிவித்துள்ளார்.

**7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, அண்ணாமலை நகர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

மனுதாரர் திரு.M.பாலசுப்ரமணியன் தனது குடும்ப செலவுகளுக்காக 20கும் மேற்பட்ட ஆடுகளை வளர்த்து வருவதாகவும், ஆடுகளுக்கு தொழில் வரி செலுத்தி வருவதாகவும் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெற்கிருப்பு, மண்ரோடு, KPM நகர், ஆமைப்பள்ளம், திடல்வெளி ஆகிய பகுதிகளில் தெருநாய்கள் ஆடுகளை கடித்து விடுவதால் வருமானத்திற்கு அல்லல்படுகிறோம் என்றும் மேலும் பள்ளிக்குச்செல்லும் குழந்தைகள், முதியோர்கள், பெண்கள், வியாபாரிகள், வாகனத்தில் பயணம் செய்வோர்களையும் கடித்து உயிர்களுக்கு சேதத்தையும் இழப்பையும் ஏற்படுத்துகிறது எனவும் இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

அண்ணாமலைநகர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட மண்ரோடு, KRM நகர், ஆமைப்பள்ளம் மற்றும் திடல்வெளி ஆகிய பகுதிகளில் நாய்கள் நடமாட்டம் கண்காணிக்கப்பட்டு ABC இனப்பெருக்க கட்டுப்பாடு செய்தும் Ani Rabies தடுப்பூசிகள் செலுத்தியும் அவற்றை பிடித்த இடத்திலேயே விடுவிக்கப்படகின்றன என செயல் அலுவலரின் வாக்குமூலத்தின் மூலம் அறியமுடிகிறது.

**<u>விலங்கு இன விருத்தி கட்டுப்பாடு விதிகள் 2023</u>**

"விலங்குகள் வதை தடுப்புச் சட்டம் 1960இன் கீழ், விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு விதிகள், 2023 மார்ச் 10, 2023 தேதியிட்ட அறிவிக்கையின் வாயிலாக மத்திய அரசு வெளியிட்டுள்ளது. விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு (நாய்கள்) விதிகள், 2001 ரத்து செய்யப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க இந்த விதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. தெரு நாய்களை வேறு இடங்களில் கொண்டு விடுவதை அனுமதிக்க முடியாது என்று பல்வேறு தீர்ப்புகளில் உச்சநீதிமன்றம் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

இந்த விதிகளின்படி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் / நகராட்சிகள் / மாநகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துகள் உள்ளிட்டவை, தெரு நாய்களுக்கு கருத்தடை மற்றும் தடுப்பூசி போடுவதற்கான விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு திட்டப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இதுப்போன்ற பணிகளை மேற்கொள்ளும்போது விலங்குகளை வதை செய்யும் பிரச்சனையும் தீர்க்கப்பட வேண்டும். இந்த விதிகளை முறையாக அமல்படுத்தி, விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு திட்டத்தை உள்ளாட்சி அமைப்புகள் செயல்படுத்தலாம். இதன் மூலம் விலங்குகள் பாதுகாப்பு சம்பந்தமான விஷயங்களில் கவனம் செலுத்தப்பட்டு, தெரு நாய்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறையும்.

விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடு மற்றும் ரேபிஸ் நோய்த் தடுப்புத் திட்டங்களையும் மாநகராட்சிகள் செயல்படுத்த வேண்டும். தெரு நாய்களை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லாமல் நாய்களுக்கு ஏற்படும் பிரச்சனையை எவ்வாறு தீர்ப்பது என்பதற்கு இந்த விதிகளில் வழிமுறைகள் இடம்பெற்றுள்ளன.

விலங்கு இனவிருத்தி கட்டுப்பாடுத் திட்டத்திற்காக இந்திய விலங்குகள் நல வாரியத்தால் பிரத்தியேகமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் இத்திட்டம் அமல்படுத்தப்பட வேண்டும். இது போன்ற நிறுவனங்களின் பட்டியல் வாரியத்தின் இணையதளத்தில் விரைவில் பதிவேற்றம் செய்யப்படும். இது சம்பந்தமான அறிவிப்பை மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், கால்நடைப் பராமரிப்புத் துறை மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறைகளுக்கு மத்திய அரசு ஏற்கனவே அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது."

எனவே அண்ணாமலைநகர் சிறப்பு நிலை பேரூராட்சியின் செயல்அலுவலரின் அறிக்கை மற்றும் அவருடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறும், மத்திய அரசின் விதிகளையும், The Prevention of cruelty (capture of Animals) Rule, 1979 மற்றும் The Animal Birth Control Rules, 2023ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை பின்பற்றி அண்ணாமலைநகர் சிறப்பு நிலை பேரூராட்சியில் சுற்றித்திரியும் தெருநாய்களை பிடித்து இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு அண்ணாமலைநகர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும் அண்ணாமலைநகர் சிறப்பு நிலை பேரூராட்சியில் உள்ள அனைத்து தெருக்களிலும் சுற்றித் திரியும் தெரு நாய்களை மேலே குறிப்பிட்டுள்ள விதிகளின்படி இனபெருக்கத்தை கட்டுப்படுத்தவும் பொது மக்கள், மாணவ/மாணவியர்கள் அச்சமின்றி நடமாட வழிவகை செய்வதை உறுதிபடுத்துமாறு

அண்ணாமலைநகர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மேலும் மனுதாரர் 20.12.2023 அன்று விசாரணையில் கலந்து கொண்டு வாக்குமூலத்தை சமர்ப்பிக்காமல் சென்றது இம்முறைமன்றத்தை அவமதித்தாகக் கருதி மனுதாரரை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும் இம்முறைமன்றத்தின் மாண்பையும் நேரத்தையும் விரயமாக்கிய கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுக்கா, அண்ணாமலைநகர், K.R.M. நகர், 8வது குறுக்குத்தெருவில் வசிக்கும் திரு.M.பாலசுப்ரமணியம் அவர்களால் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கப்படும் மனுக்கள் மீது இம்முறைமன்ற நடுவத்தால் 6 (ஆறு) மாதங்களுக்கு நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படாது என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. M.பாலசுப்ரமணியன்,
8th. Cross street,K.R.M.நகர்,
அண்ணாமலை நகர், சிதம்பரம் வட்டம்,
கடலூர் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
அண்ணாமலை நகர் சிறப்பு நிலை பேரூராட்சி,
அண்ணாமலைநகர், சிதம்பரம் தாலுக்கா,
கடலூர் மாவட்டம்

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

4) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை-600 032

செயலாளர்